தமிழ் இலக்கிய வினா விடைகள் - பகுதி - 2 :- (இவ்வினா விடைகள் அனைத்தும் தேவிரா புத்தகத்தை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்டது)

101) சுரதாவின் தேன்மொழி நூலுக்கு எந்த ஆண்டு தமிழக அரசு விருது கிடைத்தது?

1) 1961

2) 1963

3) 1968

4) 1969

102) சுரதா அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற ஆண்டு எது?

1) 1972

2) 1975

3) 1978

4) 1970

103) பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரை பற்றி முடியரசன் எழுதிய நூல் எது?

1) வீரகாவியம்

2) பூங்கொடி

3) காவியப்பாவை

4) ஊன்றுகோல்

104) முடியரசின் பூங்கொடி நூலக்கு எந்த ஆண்டு தமிழக அரசு விருது பெற்றது?

1) 1966

2) 1965

3) 1969

4) 1971

105) நீராருங் கடலுடுத்த பாடலை எந்த ஆண்டு தமிழக அரசு தமிழ் வாழ்த்து பாடலாக அறிவித்தது?

1) 1969

2) 1970

3) 1974

4) 1972

106) முதன் முதலில் புதுக்கவிதையை வெளியிட்ட இதழ் எது?

1) எழுத்து

2) மணிக்கொடி

3) வானம்பாடி

4) தினவர்த்தனமானி

107) பாரதியார் எழுதிய புதுக்கவிதையானது கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம் பெற்றது?

1) அன்பு செய்தல்

2) தொழில்

3) சுதந்திர தாகம்

4) காட்சி

108) அப்துல் ரகுமான் அவர்கள் அறிஞர் அண்ணா பற்றி எழுதிய கவிதை தொகுப்பு நூல் எது?

1) பால்வீதி

2) விதைப்போல் விழுந்தவன்

3) முத்தமிழின் முகவரி - (கலைஞர் கருணாநிதியை பற்றி எழுதிய கவிதையரங்க தொகுப்பு)

4) நேயர் விருப்பம்

109) மு.மேத்தா அவர்களின் எந்த கவிதை நூலானது தமிழக அரசு விருது பெற்றது?

1) ஊர்வலம்

2) ஆகாயத்தில் அடுத்த வீடு - (சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல்)

3) மனச்சிறகு

4) கண்ணீர் பூக்கள்

110) வைரமுத்துவின் எழுதிய முதல் கவிதை நூல் எது?

1) வைகறை மேகங்கள்

2) கண்ணீரை சிரிக்க விடுவோம் - (வானொலியில் முதன் முதலாக பாடிய புதுக்கவிதை தலைப்பு)

3) இளநெஞ்சின் ஏக்கம்

4) இன்னொரு தேசிய கீதம்

111) வைரமுத்துவின் முதல் கவிதை தொகுப்பு நூல் எது?

1) வைரமுத்து கவிதைகள்

2) தமிழுக்கு நிறம் உண்டு

3) கருவாச்சி காவியம்

4) வைகறை மேகங்கள்

112) புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி என்று அழைக்கப்படுபவர் யார்?

1) பாரதியார்

2) பாரதிதாசன்

3) ந.பிச்சமூர்த்தி

4) நா.காமராசன்

113) சி.சு.செல்லப்பாவின் எந்த நூலானது அவரை சிறந்த எழுத்தாளராக அறிமுகம் செய்தது?

1) சுதந்திர சங்கு

2) சுதந்திர தாகம்

3) சரசாவின் பொம்மை

4) மணல் வீடு

114) சி.சு.செல்லப்பா அவர்கள் எழுத்து என்ற இதழை தொடங்கிய ஆண்டு எது?

1) 1953

2) 1955

3) 1956

4) 1958 - (119 இதழ்கள் மட்டுமே வந்தது)

115) சி.சு.செல்லப்பாவின் எந்த நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது?

1) சுதந்திர சங்கு

2) சுதந்திர தாகம் - (2001 ஆண்டு)

3) சரசாவின் பொம்மை

4) மணல் வீடு

116) ஒரு புளியமரத்தின் கதை என்ற நூலை எழுதியவர் யார்?

1) சி.சு.செல்லப்பா

2) தருமு.சிவராமு

3) சுந்தரராமசாமி - பசுவய்யா (இவரின் இயற்பெயர்)

4) இரா.மீனாட்சி

117) பாரதி மற்றும் பாரதிதாசனுக்கு பிறகு பெண் உரிமை குறித்து அதிகம் எழுதியவர் யார்?

1) வாணிதாசன்

2) முடியரசன்

3) இரா.மீனாட்சி

4) ஈரோடு தமிழன்பன்

118) ஆயிரம் அரங்கம் கண்ட கவியரங்க கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்?

1) சாலை இளந்திரையன்

2) ஈரோடு தமிழன்பன்

3) கலாப்ரியா

4) நா.காமராசன்

119) பூத்தது மானுடம், காக்கை விடு தூது, உரைவீச்சு போன்ற கவிதை நூல்களை எழுதியவர் யார்?

1) மகாலிங்கம் - (சாலை இளந்திரையனின் இயற்பெயர்)

2) கனகசவுந்தரி

3) ந.பிச்சமூர்த்தி

4) பாபநாசம் சிவம்

120) தமிழ் தியாகராயர் என்று அழைக்கப்படுபவர் யார்?

1) கச்சியப்ப சிவாச்சாரியார்

2) நம்மாழ்வார்

3) உமாபதி சிவம்

4) ராமசர்மன் - பாபநாசம் சிவம் (இவர் இயற்பெயர்)

121) திருக்குறளின் கருத்துக்களை அதிகமாகவும் மற்றும் சீர்திருத்த கருத்துக்களை முதன் முதலாக திரைப்பட பாடல்களில் புகுத்தியவர் யார்?

1) உடுமலை நாரயணகவி

2) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

3) கண்ணதாசன்

4) மருதகாசி

122) சம்பூர்ண இராமாயண பாடல்கள் முழுவதும் எழுதியவர் யார்?

1) உடுமலை நாரயணகவி

2) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

3) கண்ணதாசன்

4) மருதகாசி

123) பொதுவுடைமை கருத்துக்களை திரைப்பட பாடலில் புகுத்திய கவிஞர் யார்?

1) உடுமலை நாரயணகவி

2) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

3) கண்ணதாசன்

4) மருதகாசி

124) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை எனது வலது கை என்று கூறியவர் யார்?

1) சுப்பையா

2) சுப்புரத்தினம் - பாரதிதாசன்

3) நாராயண கவி

4) கவிமணி

125) பட்டுக்கோட்டை அவர்கள் கோட்டை நான் பேட்டை என்று வேடிக்கையாக கூறியவர் யார்?

1) திரைக்கவித் திலகம்

2) பாவேந்தர்

3) வணங்காமுடி

4) பகுத்தறிவு கவிராயர் - உடுமலை நாரயணகவி

126) கண்ணதாசனை கவிஞர் என்ற அடைமொழியோடு முதன் முதலில் மேடையேற்றியவர் யார்?

1) அறிஞர் அண்ணா

2) எம்.ஜி.இராமச்சந்திரன்

3) கலைஞர் கருணாநிதி - (1949 ஆம் ஆண்டு)

4) இயக்குநர் ராம்நாத் - (கண்ணதாசனை திரைப்படத்துறைக்கு முதன் முதலில் அறிமுகம் செய்தவர்)

127) 'திரு.வி.க பூங்கா என் பாடல்களின் பிரசவ அறை' - என்று கூறியவர் யார்?

1) கண்ணதாசன்

2) மருதகாசி

3) பட்டுக்கோட்டை

4) வைரமுத்து

128) கவிதை மொழிக்கு ஆடை கட்டி விடுகிறது, இசையோ இறகை கட்டி விடுகிறது - என்று கூறியவர் யார்?

1) பகுத்தறிவு கவிராயர்

2) மக்கள் கவிஞர்

3) கமகப்பிரியா

4) கவிப்பேரசு

129) குழந்தை இலக்கிய மூவர் முதலிகளில் என்று கூறப்படுபவரில் இடம்பெறாத புலவர் யார்?

1) கா.நமச்சிவாய முதலியார்

2) அழ.வள்ளியப்பா -(தமிழ்க் இலக்கிய முன்னோடி, மழலைக்கவிச் செல்வம் என்ற அழைக்கப்படுபவர்)

3) மணி திருநாவுக்கரசு முதலியார்

4) மயிலை முத்துக்குமார சுவாமி முதலியார்

130) மெய்க்கீர்த்தியை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக கருதாத பாட்டியல் நூல் எது?

1) தொன்னூல் விளக்கம்

2) பன்னிரு பாட்டியல்

3) நவநீதப் பாட்டியல்

4) இலக்க்கண விளக்கப் பாட்டியல்

131) உரைநடையை தனி இலக்கியமாக வளர்த்தவர்கள் யார்?

1) கிறித்துவர்கள்

2) வைணவர்கள்

3) இஸ்லாமியர்கள் - (உரையை உரைநடையாக மாற்றியவர்கள்)

4) சமணர்கள் - (உரையை வளர்த்தவர்கள்)

132) 19 ஆம் நூற்றாண்டின் உரைநடை வேந்தர் என்று அழைக்கப்படுபவர் யார்?

1) வீரமாமுனிவர் - (செல்வநாயகம் தாம் எழுதிய உரைநடை வரலாறு என்ற நூலில் இவரை உரைநடையின் தந்தை என்று குறிப்பிட்டுள்ளார்)

2) ஆறுமுக நாவலர்

3) இராபர்ட்-டி-நோபிலி

4) தாண்டவராய முதலியார் - (19 ஆம் நூற்றாண்டின் உரைநடை இளவரசு)

133) 20 ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

1) சேனாவரையர்

2) திரு.வி.க

3) இளம்பூரனார்

4) தாண்டவராய முதலியார்

134) தொல்காப்பியம் முழுமைக்கும் முதலில் உரை கண்டவர் யார்?

1) இளம்பூரனார்

2) பேராசிரியர் - (தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதினார்)

3) சேனாவரையர் - (தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதினார்)

4) பெருந்தேவனார்

135) 'என்றான் ஆசிரியர்' - என்று நூலாசிரியரை ஒருமையில் கூறும் ஒரே ஆசிரியர் யார்?

1) இளம்பூரனார்

2) பேராசிரியர்

3) நச்சினார்க்கினியார்

4) சங்கர நமச்சிவாயர்

136) கலிங்கத்துப்பரணியை முதன் முதலில் மேற்கொள் காட்டிய உரையாசிரியர் யார்?

1) நச்சினார்க்கினியார்

2) உ.வே.சா

3) அடியார்க்கு நல்லார்

4) பரிமேலழகர்

137) 'நூலிற் பாரித்த உரையெல்லாம் பரிமேலழகன்

தெரித்த உரையாமோ தெளி' - என்று பரிமேலழகரின் உரையை சிறப்பித்த நூல் எது?

1) திருவள்ளுவமாலை

2) திருமுருகாற்றுப்படை

3) தொண்டை மண்டல சதகம்

4) பரிபாடல்

138) உரைச்சக்கரவர்த்தி என்று புகழப்படுபவர் யார்?

1) ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை - (சங்க இலக்கியத்துகு சிறந்த உரை கண்டவர்)

2) மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்

3) க.ப.அறவணன் - (மறைந்து போன சமண இலக்கணங்களை தொகுத்து உரை கண்டவர்)

4) புலியூர் கேசிகன் - (பழைய இலக்கண இலக்கியங்களுக்கு தெளிவுரை எழுதியவர்)

139) உ.வே.சா அவர்களுக்கு சங்க இலக்கியங்களை அறிமுகம் செய்து வைத்தவர் யார்?

1) சோமசுந்தர பாரதியார்

2) மீனாட்சி சுந்தரம் பிள்ளை - (உ.வே.சா வின் ஆசிரியர்)

3) தியாகராஜ செட்டியார் - (உ.வே.சா வின் நெருங்கிய நண்பர்)

4) இராமசாமி முதலியார்

140) உ.வே.சா அவர்கள் முதலில் பதிப்பித்த நூல் எது?

1) வேணுவனலிங்க விலாசச் சிறப்பு

2) சீவக சிந்தாமணி - (பதிப்பித்த முதல் காப்பியம்)

3) நீலி இரட்டைமணி மாலை

4) புறப்பொருள் வெண்பாமாலை

141) 1906 ஆம் ஆண்டு உ.வே.சா அவர்களுக்கு தமிழக அரசு கீழ்க்கண்ட எந்த பட்டத்தை அளித்தது?

1) தமிழ்த் தாத்தா - (தமிழ் அன்பர்கள் வைத்தது)

2) மகாமகோபாத்தியாய

3) டாக்டர் - (சென்னை பல்கலைக்கழகம் கொடுத்தது)

4) தட்சிணாத்திய கலாநிதி

142) உ.வே.சா அவர்களுக்கு 1925 ஆம் ஆண்டு சங்கராச்சாரியார் அவர்களால் கீழ்க்கண்ட எந்த பட்டம் அளிக்கப்பட்டது?

1) திராவிட வித்யா பூஷணம்

2) மகாமகோபாத்தியாய

3) சிறந்த பதிப்பாசிரியர்

4) தட்சிணாத்திய கலாநிதி

143) வேதாசலம் அவர்கள் எந்த ஆண்டு தனித்தமிழ் இயக்கத்தை கண்டார்?

1) 1911

2) 1915

3) 1916

4) 1918

144) தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படுகிறவர் யார்?

1) சூரியநாராயண சாஸ்திரி

2) தேவநேயப் பாவணர்

3) திரு.வி.க

4) முருகவேள்

145) தம் நூல்களில் நிறுத்த குறியீடுகளை மிகுதியாக பயன்படுத்தியவர் யார்?

1) திரு.வி.க

2) பெர்சில் பாதிரியார்

3) மறைமலையடிகள்

4) ஆறுமுக நாவலர்

146) உரைநடையை தொழிலாக கருதி தமிழுக்கு தொண்டு செய்தவர் யார்?

1) ஆறுமுக நாவலர்

2) இராபி.சேதுபிள்ளை

3) சி.வை.தாமோதரம் பிள்ளை

4) திரு.வி.க

147) பொருத்துக : (திரு.வி.க நூல்களின் தொகுப்பிலிருந்து)

1) சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் - மேடைத் தமிழ்

2) பத்திரிக்கை தலையங்க தொகுப்பு நூல் - அருள்வேட்டல் விடை = 4 3 2 1

3) சமய சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் - தமிழ்ச் சோலை

4) மேடைச் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் - தமிழ்த் தென்றல்

148) கீழ்க்கண்ட புலவரில் யாரை போல ஆறுமுக நாவலார் அவர்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றினார்?

1) இரா.பி.சேதுப்பிள்ளை

2) மறைமலையடிகள்

3) திரு.வி.க

4) பரிமேலழகர்

149) ஆறுமுக நாவலருக்கு நாவலார் என்ற பட்டத்தை அளித்தவர் யார்?

1) இராமலிங்கனார்

2) வி.கனகசபை பிள்ளை

3) சுப்ரமணிய ஐயர்

4) சுப்ரமணிய தேசிகர் - (திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக இருந்தார்)

150) நிறுத்த குறியீடுகளை முதல் முதலாக தமிழ்க்கு அறிமுகம் செய்தவர் யார்?

1) திரு.வி.க

2) வீரமாமுனிவர்

3) பெரியார்

4) ஆறுமுக நாவலர்

151) 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர் - என்ற நூலை எழுதியவர் யார்?

1) வி.கனகசபை பிள்ளை

2) கா.சுப்ரமணிய பிள்ளை - (எம்.எல் பட்டம் பெற்ற முதல் தமிழர்)

3) பூரணலிங்கம் பிள்ளை - (தமிழ் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர்)

4) பண்டிதமணி கதிரேஞ் செட்டியார்

152) தமிழ் மொழியியல் ஆய்வின் முன்னோடி - என்று அழைக்கப்படுபவர் யார்?

1) கா.சுப்ரமணிய பிள்ளை

2) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

3) தேவநேய பாவாணர்

4) சோமசுந்தரனார்

153) தமிழ் சிறுகதையின் முன்னோடி என அழைக்கப்பட்டவர் யார்?

1) வ.வே.சு.ஐயர்

2) புதுமைப்பித்தன்

3) வீரமாமுனிவர்

4) ஜெயகாந்தன்

154) தமிழ் சிறுகதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

1) வீரமாமுனிவர்

2) புதுமைப்பித்தன்

3) வ.வே.சு.ஐயர்

4) பாரதியார்

155) தமிழில் வெளிவந்த முதல் சிறுகதை தொகுதி எது?

1) குளத்தங்கரை அரச மரம்

2) மங்கையர்கரசியின் காதல்

3) சந்திரிகையின் கதை

4) அக்னிபிரவேசம்

156) குளத்தங்கரை அரச மரம் என்ற சிறுகதை வெளிவந்த ஆண்டு எது?

1) 1910

2) 1911

3) 1921

4) 1913

157) இரவீந்திரநாத் தாகூரின் எத்தனை சிறுகதைகளை பாரதியார் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார்?

1) 15 சிறுகதைகள்

2) 11 சிறுகதைகள்

3) 13 சிறுகதைகள்

4) 18 சிறுகதைகள்

158) வ.வே.சு.ஐயர் எழுதிய குளத்தங்கரை அரச மரன் என்ற சிறுகதையானது கீழ்க்கண்ட எந்த வங்கம்ழியின் சிறுகதை தழுவல் ஆகும்?

1) அதிதி

2) காபூல்காரன்

3) ரஸமணியின் பிள்ளை

4) காட்டேர் காதா

159) முதல் சிறுகதை தொகுதி நூலான மங்கையர்கரசியின் காதல் நூலில் மொத்தம் எத்தனை சிறுகதைகள் அடங்கியுள்ளது?

1) 9 சிறுகதைகள்

2) 10 சிறுகதைகள்

3) 7 சிறுகதைகள்

4) 8 சிறுகதைகள்

160) சிறுகதை வள்ளுவர் என்று அழைக்கப்படுபவர் யார்?

1) புதுமைப்பித்தன்

2) புலமைப்பித்தன்

3) மௌனி -(சிறுகதை திருமூலர் என அழைக்கப்படுபவர்)

4) ஜெயகாந்தன்

161) புதுமைப்பித்தன் எழுதிய கதைகளில் மிகுந்த விமர்சனத்திற்கு உள்ளான கதை எது?

1) பொன்னகரம்

2) கவந்தனும் காமனும்

3) சாபவிமோசனம்

4) மேற்கூறிய மூன்றும்

162) புராண இதிகாச கதைகளை விமர்சனம் செய்வது போல் சிறுகதை படைத்தவர் யார்?

1) வ.வே.சு.ஐயர்

2) கு.ப.ரா

3) கல்கி

4) புதுமைப்பித்தன்

163) சிறுகதை வேந்தன், சிறுகதை ஜாம்பவான் என்று புகழப்படுபவர் யார்?

1) சோ.விருத்தாச்சலம்

2) புலமைப்பித்தன்

3) கல்கி

4) ஜெயகாந்தன்

164) ஜெயகாந்தனின் சாகித்ய அகாடமி விருது பெற்ற நூலான சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற நூல் கீழ்க்கண்ட எந்த நூலின் தொடர்ச்சி என்று கூறப்படுகிறது?

1) அக்கினிப்பிரவேசம்

2) கங்கை எங்கே போகிறாள் - (இந்த நாவல் சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற நாவலின் தொடர்ச்சி ஆகும்)

3) ஒரு மனிதன் ஒரு வீடு

4) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

165) சிறுகதை மன்மதன் என்று அழைக்கப்படுபவர் யார்?

1) ஜெகசிற்பியன்

2) கு.ப.ரா

3) கல்கி

4) அண்ணா

166) ஆண், பெண் உறவு குறித்து மிகுதியாக சிறுகதை எழுதியவர் யார்?

1) கு.ப.ரா

2) கல்கி

3) அண்ணா

4) கலைஞர் மு.கருணாநிதி

167) கல்கியின் முதல் சிறுகதை எது?

1) சாரதியின் தந்திரம்

2) கள்வனின் காதலி

3) பார்த்திபன் கனவு

4) தியாக பூமி

168) விடுதலை இயக்க தொடர்பாக கல்கி எழுதிய நூல்களில் வேறுபட்ட நூல் எது?

1) அலையோசை

2) தியாகபூமி

3) மகுடபதி

4) சோலைமலை இளவரசி

169) வரலாற்று நாவல்களை மிகுதியாக எழுதியவர் யார்?

1) சாண்டியல்யன்

2) கல்கி

3) தமிழ்வாணன்

4) கி.ஜ.நாராயணன்

170) ரோமாபுரி ராணிகள் - என்ற புதினத்தை எழுதியவர் யார்?

1) கலைஞர்.கருணாநிதி - (ரோமாபுரி பாண்டியன் என்ற நாவலை எழுதினார்)

2) அறிஞர் அண்ணா

3) கல்கி

4) கு.ப.ரா

171) இந்தியாவின் முதல் நாவல் எது?

1) கோகிலம்மாள் கடிதம் - ((முதல் கடித நாவல் - 1927 ஆண்டு மறைமலையடிகளால் எழுதப்பட்டது)

2) ஆனந்த மடம்

3) துர்கேச நந்தினி - (1855 ஆண்டு வங்க மொழியில் பக்கிம் சந்திர சாட்டர்ஜியால் எழுதப்பட்டது)

4) மோகனாங்கி - ((முதல் வரலாற்று நாவல் - 1895 ஆண்டு தி.த.சரவணமுத்து பிள்ளை எழுதியது)

172) முதல் சத்தியாகிரக நாவல் எது?

1) கதரின் வெற்றி

2) பலாத்காரம் - (1933 ஆண்டு சாண்டில்யன் எழுதியது)

3) தேசபக்தன் கந்தன் - (கே.எஸ்.வேங்கடரமணி - 1930 ஆண்டு எழுதியது)

4) தானவன் - ((முதல் துப்பறியும் நாவல் - எஸ்.எம்.நடேச சாஸ்திரி - 1894 ஆண்டு எழுதியது)

173) முதல் மானிடவியல் நாவல் எது?

1) குறிஞ்சித்தேன் - (இராஜம் கிருஷ்ணன் எழுதியது)

2) மண்ணாசை - ((முதல் கிராமிய நாவல் - சங்கரராம் 1940 ஆண்டு எழுதியது)

3) பிரதாப முதலியார் சரித்திரம் - (தமிழின் முதல் நாவல் - 1876 ஆண்டு மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதியது)

4) கமலாம்பாள் சரித்திரம் - ((முதல் தொடர்கதை நாவல் - 1896 ஆண்டு விவேகசிந்தாமணி இதழில் இராஜம் ஐயர் எழுதியது)

174) முதல் கிறித்துவ குடும்ப நாவல் எது?

1) அசன்பே சரித்திரம் - (ஈழத்து முதல் நாவல் - 1885 ஆண்டு முகமது காசிம் மரைக்காயர் எழுதியது)

2) மலரும் சருகும் - ((முதல் தலித் நாவல் - டி.செல்வராஜ் எழுதியது)

3) மலரோ மணமோ - (1953 ஆண்டு)

4) வீரசிங்கன் - (ஈழப்பின்னணி முதல் நாவல் - சி.வை.சின்னப்பிள்ளை எழுதியது)

175) தமிழ்நாட்டின் தாக்கரே என்று அழைக்கப்படுபவர் யார்?

1) அ.மாதவையா - (இவ்வாறு அழைத்தவர் - கைலாசபதி)

2) பி.ஆர்.ராஜம் ஐயர்

3) நடேச சாஸ்திரி

4) வேதநாயகம் பிள்ளை

176) பொருத்துக : (அகிலன் எழுதிய நூல் தொகுப்பிலிருந்து)

1) காந்தியம் பற்றி எழுதிய நூல் - புது வெள்ளம்

2) ஆண் பெண் உறவு பற்றி எழுதிய நூல் - சித்திரப்பாவை

3) சோழர் பற்றி பாடிய நூல் - வேங்கையின் மைந்தன்

4) பாண்டியர் பற்றி பாடிய நூல் - கயல்விழி

விடை = 1 2 3 4

177) வ.ரா அவர்களை அக்கிரகாரத்து மனிதர் என்று அழைத்தவர் யார்?

1) பாரதியார்

2) பாரதிதாசன்

3) கு.ப.ரா

4) அண்ணா

178) பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஜோடி மோதிரம் என்ற நாவலை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

1) வ.ரா

2) பாரதியார்

3) வ.வே.சு ஐயர்

4) மு.வரதராசனார்

179) தமிழ்நாட்டின் மிகுதியான மர்ம நாவல்களை எழுதியவர் யார்?

1) ஜீவா

2) சாண்டியல்பன்

3) கல்கி

4) ராமநாதன் - (தமிழ்வாணன்)

180) அசோக மித்ரனின் எந்த நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது?

1) கரைந்த நிழல்கள்

2) ஆகாய தாமரை

3) அப்பாவின் சிநேகிதர்கள்

4) தண்ணீர்

181) முழுவதும் வசனத்தில் வந்த முதல் நாடகம் எது?

1) டம்பாச்சாரி விலாசம் - (மேடையில் நடிக்கப்பட்ட முதல் சமூக நாடகம் - காசிவிசுவநாத முதலியார் எழுதியது)

2) பிரதாப சரித்திர விலாசம் - (திண்டிவனம் இராமசாமி இராஜா எழுதியது)

3) சித்திராங்கி விலாசம் - (இந்துஸ்தானி மெட்டுகள் நுழைந்த முதல் நாடகம் - அப்பாவுப்பிள்ளை எழுதியது)

4) சகுந்தலை விலாசம்

182) சங்கரதாஸ் சுவாமிகள் ஒரே இரவில் எழுதி முடித்த நாடகம் எது?

1) அபிமன்யு சுந்தரி

2) பவளக்கொடி

3) சதிசுலோசனா

4) சத்தியவான் சாவித்திரி

183) தமிழை தெய்வமாக போற்றிய நூல் எது?

1) தமிழிசைக் குறவஞ்சி

2) திருவள்ளுவமாலை

3) தமிழ் புலவர் சரித்திரம்

4) மனோன்மணீயம்

184) பரிதிமாற்கலைஞர் நாடகவியலுக்கு இலக்கியமாக திகழுமாறு கீழ்க்கண்ட எந்த நூலை எழுதினார்?

1) ரூபாவதி - (அறக்கருத்து நிறைந்தது)

2) கலாவதி

3) சூர்ப்பநகை - (புராண நாடகம்)

4) மானவிஜயம் - (கணைக்கால் இரும்பொறை வரலாற்றை கூறுகிறது)

185) தமிழில் வெளிவந்த முதல் உரை நடை நாடகம் எது?

1) ரூபாவதி

2) விரும்பிய விதமே

3) சதிசுலோசனா

4) மனோகரா

186) கதரின் வெற்றி, தேசியக்கொடி, பம்பாய் மெயில் - போன்ற நாடக நூல்களை எழுதியவர் யார்?

1) பவானந்தம் பிள்ளை

2) தெ.பொ.கிருஷ்ணசாமி

3) எத்திராஜிலு

4) டி.கே.முத்துசாமி

187) ஒரு பைசாத் தமிழன் என்ற வார இதழை அயோத்திதாச பண்டிதர் தொடங்கிய ஆண்டு?

1) 19.05.1907

2) 19.06.1906

3) 19.06.1907 - (இராயபேட்டையிலிருந்து புதன் தோறும் வந்தது)

4) 19.04.1907

188) இந்தியமொழி இதழ்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

1) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக் - (இந்திய இதழின் தந்தை)

2) இராஜாராம் மோகன் ராய்

3) ஜி.சுப்ரமணிய ஐயர்

4) வில்லியம்ஸ்

189) தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் இதழ் எது?

1) மெட்ராஸ் கெஜட் - (1795 - வில்லியம்ஸ் தொடங்கியது)

2) சிலோன் கெஜட் - முதன் முதலில் தமிழ் இடம் பெற்ற முதல் இதழ் - இது ஆங்கிலம்,சிங்களம்,தமிழ் கலந்த மும்மொழி இதழ்)

3) தமிழ் மெகஸின் - (தமிழில் வந்த முதல் இதழ் - 1831 ஆண்டு கிறித்துவ சமய பிரச்சார கழகம் வெளியிட்டது)

4) தினவர்த்தமானி

190) தமிழில் வெளிவந்த முதல் அரசியல் இதழ் எது?

1) இந்தியா

2) சுதேசிமித்ரன் - (1882 - ஜி.சுப்பரமணிய ஐயர் தொடங்கியது)

3) தமிழ் மெகஸின்

4) தினவர்த்தமானி - (தமிழில் முதல் வார இதழ் - 1855 ஆண்டு பெரிசிவல் பாதிரியார் வெளியிட்டது)

191) முதன் முதலில் கருத்துப்படங்கள் (கார்ட்டூன்) வெளிவந்த இதழ் எது?

1) சுதேசிமித்ரன்

2) இந்தியா

3) விஜயா

4) கர்மயோகி

192) முதன் முதலில் புகைப்படம் போட்ட இதழ் எது?

1) கலாமோகினி - (சாலிவாகனன் தொடங்கிய இதழ்)

2) செந்தமிழ்

3) ஆனந்த விஜய விகடன்

4) தினத்தந்தி

193) பெண்களுக்காக நடத்தப்பட்ட முதல் இதழ் எது?

1) மஞ்சரி - (மொழிபெயர்ப்பு கதைகள் மிகுந்த இதழ்)

2) கலைக்கதிர் - (அறிவியல் கருத்துகள் மிகுந்த நூல்)

3) நீலலோசினி

4) அமிர்தவசனி

194) பொருத்துக :

1) இசை அரசர் - எம்.கே.தியாகராஜ பாகவதர்

2) ஏழிசை மன்னர் - சீர்காழி கோவிந்தராஜன் விடை = 4 1 2 3

3) இசை மணி - சிதம்பரம் ஜெயராமன்

4) இசை சித்தர் - தண்டபாணி தேசிகர்

195) கீழ்க்கண்ட தமிழக முதலமைச்சர்களில் வேறுபட்டவர் யார்?

1) அறிஞர் அண்ணா (1968 - சென்னை - 2 வது உலக தமிழ்மாநாட்டின் போது தமிழக முதலமைச்சர்)

2) எம்.ஜி.ஆர் - (1981 - மதுரை - 5 வது உலக தமிழ்மாநாட்டின் போது தமிழக முதலமைச்சர்)

3) ஜெ.ஜெயலலிதா - (1995 - தஞ்சாவூர் - 8 வது உலக தமிழ்மாநாட்டின் போது தமிழக முதலமைச்சர்)

4) கலைஞர் கருணாநிதி

196) இரா.கிருஷ்ணமூர்த்தியின் எந்த நூலானது சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல் எது?

1) கள்வனின் காதலி

2) பார்த்திபன் கனவு

3) சாவின் முத்தம்

4) அலையோசை - (1956 ஆம் ஆண்டு)

197) தமிழக கலைஞர்களுக்கு கீழ்க்கண்ட விருதுகளில் எந்த விருது முதன் முதலில் கொடுக்கப்பட்டது?

1) கபிலர் விருது - (2012 ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வருகிறது)

2) திருவள்ளுவர் விருது - (1986 ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வருகிறது)

3) பாரதியார் விருது - (1997 ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வருகிறது)

4) பாவேந்தர் பாரதிதாசன் விருது - (1978 ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வருகிறது)

198) தமிழின் செம்மொழித் தகுதிகளைத் திட்ப நுட்பத்துடன் வரையறுத்து அவற்றை தமிழுக்கு பொருத்தி மிகவிரிவாக ஆய்வு செய்தவர் யார்?

1) தேவநேயப்பாவாணர் - (தமிழின் செம்மொழி தகுதிகளை சான்றுகளுடன் எடுத்துக்காட்டியவர் - 1966)

2) பரிதிமாற்கலைஞர் - (தமிழுக்கு செம்மொழி தகுதி கோரிய முதல் தமிழர் - 1887)

3) தமிழ்வேள் உமாமகேசுவரனார் - (கரந்தை தமிழ் சங்கத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றியவர் - 1923)

4) மணவை முஸ்தபா

199) குகைக்கல்வெட்டுகள் இல்லாத நாடு எது?

1) சேர நாடு

2) சோழ நாடு

3) பாண்டியர் நாடு

4) பல்லவர் நாடு

200) முதன் முதலில் தனித்தமிழில் செப்பேட்டை எழிதிய மன்னன் யார்?

1) முதலாம் இராசேந்திரன் - (மிகப்பெரிய செப்பேடும் இவருடையதான்)

2) வீரபாண்டியன் - (பாண்டியர்களில் தனித்தமிழில் செப்பேடு எழுதியவர்)

3) சிம்மவிஷ்ணு

4) முதலாம் இராஜராஜன்

201) தமிழ்நாடு தொல்பொருள் துறையின் முதல் இயக்நர் யார்?

1) தி.நா. சுப்பிரமணியன் - (தமிழ்க் கல்வெட்டியலின் முன்னோடி)

2) ஐராவதம் மகாதேவன்

3) இரா.நாகசாமி

4) பூங்குன்றனன்

202) மக்களின் தொல்பொருள் வல்லுநர் என போற்றப்படுபவர் யார்?

1) புலவர் செ.இராசு

2) ஐராவதம் மகாதேவன்

3) தி.நா. சுப்பிரமணியன்

4) இரா.நாகசாமி

203) அறிவியல் தமிழின் முன்னோடி, அறிவியல் தமிழின் தந்தை, அறிவியல் நூல்களுக்காக யுனெஸ்கோ விருது பெற்றவர் யார்?

1) பெ.நா. அப்புஸ்வாமி

2) ஆர்.கே.விஸ்வநாதன்

3) அ.சுந்தரமூர்த்தி

4) ஜி.ஆர்.தாமோதரன்

204) சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலை 'அநிநாய கண்டம்' - என்று கூறினார்?

1) இலக்கண விளக்கம்

2) இலக்கண விளக்க சூறாவளி

3) இலக்கண கொத்து

4) பிரயோக விவேகம்

205) திருக்குறளுக்கு தோன்றிய முதல் திறனாய்வு நூல் எது?

1) திருக்குறள் அகவல்

2) திருக்குறள் இசைமாலை

3) குட்டிக்குறள்

4) திருவள்ளுவமாலை

206) சிலப்பதிகாரம் நூலை தவிர்த்து உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என கூறப்படும் மற்றொரு நூல் எது?

1) தகடூர்யாத்திரை

2) மணிமேகலை

3) களவியல் உரை

4) தண்டியாத்திரை

207) வியாக்கியானச் சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்டவர் யார்?

1) திருக்குருகைப்பிரான் பிள்ளை

2) நஞ்சீயூர்

3) பெரியவச்சான் பிள்ளை

4) நம்மாழ்வார்

208) வடக்குவீதிப் பிள்ளையின் உரை கீழ்க்கண்டவற்றில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1) படி

2) கிரந்தம்

3) ஈடு

4) வியாக்கினம்

209) எதுகை,மோனையும் அடுக்குமொழியையும் அமைந்த நடையில் உரைநடையை எழுதியவர் யார்?

1) வ.சுப.மாணிக்கம்

2) அறிஞர் அண்ணா

3) திரு.வி.க

4) இரா.பி.சேதுப்பிள்ளை

210) முதல் பகுப்புமுறைத் திறனாய்வாளர் - என்று அழைக்கப்படுபவர் யார்?

1) மறைமலையடிகள்

2) செல்வக்கேசவராயர்

3) வ.வே.சு.ஐயர்

4) நாவலர் சோமசுந்தர பாரதியார்